ராஜராஜசோழன் சிலை

**153 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :* மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலுள்ள ராஜராஜசோழன் சிலையைப் பாதுகாக்க மண்டபம் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ராஜராஜசோழன் சிலையை பாதுகாப்பாக வைக்க அரசாங்கம் இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா? அதற்காக மேற்கொள்ளப்பட்ட பணி என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தச் சிலை ஓரளவு நகராட்சி மன்றத்தின் பொறுப்பில்தான் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலைக்கு கருங்கல் படிக்கட்டு, ரதபீடம் அமைத்தல் முதலிய வேலைகளை ரூ. 21,000 செலவில் மகாபலிபுரம் அரசு சிலை வடித்தல் பயிற்சி மையத்தின் மூலம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை மகாபலிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. பெரிய மண்டபமாகக் கட்டினல் அதற்குப் பின்னல் உள்ள பெரிய கோவில் அதனை ஒட்டிய சரித்திரச் சான்றுகள் மறைபடும். ஆகவேதான் இந்தச் சிலையை ஒட்டி ஒரு பூங்கா அமைத்து சிலைக்கு கருங்கல் படிக்கட்டு, ரதபீடம் அமைப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

முத்துசாமி தீட்சிதருக்கு நினைவுச்சின்னம்

**154. வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் :* மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரத்தில் திரு. முத்துசாமி தீட்சிதருக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?